# KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.

**மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி**

## முதல் இடைத்தேர்வு – 2024

## தமிழ்

வகுப்பு : 10 மொத்த மதிப்பெண் : 50

காலம் : 1.30 மணி

I. **சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** 7x1=7

1. எந்தமிழ்நா என்பதைப் பிரித்தால் இவ்வாறு வரும் ……….
   அ. எந் + தமிழ் + நா ஆ. எந்த + தமிழ் + நா
   இ. எம் + தமிழ் + நா ஈ. எந்தம் + தமிழ் + நா
2. வேர்கடலை மிளகாய் விதை, மாங்கொட்டை ஆகியவற்றைக் குறிக்கும் பயிர் வகை …..
   அ. குலை வகை ஆ. மணி வகை
   இ. கொழுந்து வகை ஈ. இலை வகை
3. நேமி பொருள் தருக.
   அ. வில் ஆ. வேல் இ. சக்கரம் ஈ. கடிகாரம்
4. "பாடு இமிழ் பனிகடல் பருகி" என்னும் முல்லைப்பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
   அ. கடல் நீர் ஆவியாகி மேகமாதல் ஆ. கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
   இ. கடல் நீர் ஒலித்தல் ஈ. கடல் நீர் கொந்தளித்தல்
5. எய்துவர் எய்தாப் பழி - இக்குறளுக்குப் பொருந்தும் வாய்பாடு எது?
   அ. கூவிளம் தேமா மலர் ஆ. கூவிளம் புளிமா நாள்
   இ. தேமா புளிமா காசு ஈ. புளிமா தேமா பிறப்பு
6. குலசேகர ஆழ்வார் வித்துவக்கோட்டம்மா என்று ஆண் தெய்வத்தை அழைத்துப் பாடுகிறார்.
   பூனையார் பால்சோற்றைக் கண்டதும் வருகிறார் ஆகிய தொடர்களில் இடம்பெற்றுள்ள பால் வழுவமைதி முறையே ……….
   அ. மரபு வழுவமைதி, திணை வழுவமைதி
   ஆ. இடவழுவமைதி, மரபு வழுவமைதி
   இ. பால் வழுவமைதி, திணை வழுவமைதி
   ஈ. கால வழுவமைதி, இட வழுவமைதி
7. அதோ அந்தப் பறவை போல நூலை எழுதியவர் …………
   அ. பாரதியார் ஆ. எஸ்.ராமகிருஷ்ணன்
   இ. வ.உ.சிதம்பரனார் ஈ. ச.முகமது அலி

II. **எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3x2=6

**(11ஆவது வினா கட்டாயமாக விடையளிக்க)**

8. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு ஓர் எடுத்துக்காட்டுத் தருக.
9. வசன கவிதை – குறிப்பு வரைக.
10. இறடிப் பொம்மல் பெறுகுவீர் - இத்தொடர் உணர்த்தும் பொருளை எழுதுக.

**எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :9th & 10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635**

**KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.**
**மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி**

11. கண் என முடியும் குறளை அடிமாறாமல் எழுதுக.
12. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
13. “சீசர் எப்போதும் என் சொல்பேச்சைக் கேட்பான், புதியவர்களைப் பார்த்துக் கத்துவானே தவிர கடிக்கமாட்டான்” என்று இளமாறன் தன்னுடைய வளர்ப்பு நாயைப் பற்றிப் பெருமையாகக் கூறினார் - இதில் உள்ள திணை வழுவமைதியைத் திருத்தி எழுதுக.

III. **எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 3x2=6

14. **பழமொழிகளை நிறைவு செய்க.**
அ. ஒரு பானை................
ஆ. விருந்தும் …………..
15. பகுபத உறுப்பிலக்கணம் தருக. வருக
16. **கலைச்சொல் தருக.**
அ. Modern literature ஆ. Cosmic rays
17. **அகராதியில் காண்க.**
அ. உவா ஆ. ஆர்கலி
18. எண்ணுப் பெயர்களைக் கண்டு தமிழ் எண்களில் எழுதுக.
அ. ஆனை ஆயிரம் அமரிடை வென்ற மானவனுக்கு வகுப்பது பரணி
ஆ. எறும்புத்தன் கையால் எண்சாண்.

**IV. எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2x3=6
**(19ஆவது வினா கட்டாய வினா)**

19. வாளால் அறுத்துச் சுடினும் எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடலை அடிமாறாமல் எழுதுக.
20. “பலர்புகு வாயில் அடைப்பக் கடவுநர் வருவீர் உளீரோ” – வினவுவது ஏன்?
21. ‘புளியங்கன்று ஆழமாக நடப்பட்டுள்ளது’ இதுபோல் இளம்பயிர் வகை ஐந்தின் பெயர்களைத் தொடர்களில் அமைக்க.

V. **எவையேனும் 2 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 2x3=6

22. பண்ணென்னாம் பாடற் கியைபின்றேல் கண்ணெண்ணாம்
கண்ணோட்டம் இல்லாத கண். - இக்குறளில் பயின்று வரும் அணியை விளக்குக.
23. வேலொடு நின்றான் இடுவென்றது போலும்
கோலோடு நின்றான் இரவு. - இக்குறளில் பயின்று வரும் அணியை எழுதுக.
24. தோட்டத்தில் மல்லிகைப்பூ பறித்த பூங்கொடி, வரும்வழியில் ஆடு மாடுகளுக்குத் தண்ணீர்தொட்டியில் குடிநீர் நிரப்பினாள். வீட்டினுள் வந்தவள் சுவர்க்கடிகாரத்தில் மணி பார்த்தாள். - இப்பத்தியில் உள்ள தொகைநிலைத் தொடர்களின் வகைகளைக் குறிப்பிட்டு, விரித்து எழுதுக.

VI. **எவையேனும் 3 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.** 3x4=12

**எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :9th & 10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635**

**Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com**

**KSJ சுடரொளி தமிழ் உரை, நாமக்கல்.**
**மாணவர்களுக்கான ஒரு சிறந்த வழிகாட்டி**

25. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

26. **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.**



27. **நிற்க அதற்கு தக.**

| இன்சொல் வழி | தீயசொல் வழி |
|---|---|
| பிறர் மனம் மகிழும் | பிறர் மனம் வாடும் |
| அறம் வளரும் | அறம் தேயும் |
| புகழ் பெருகும் | இகழ் பெருகும் |
| நல்ல நண்பர்கள் சேருவர் | நல்ல நண்பர்கள் விலகுவர் |
| அன்பு நிறையும் | பகைமை நிறையும் |

இதில் நீங்கள் செல்லும் வழி யாது? உங்கள் நண்பருக்குக் காட்டும் வழி யாது?

28. **மொழிபெயர்க்க.**

1. If you talk to a man in a language he understand, that goes to his head. If you take to him in his own language that goes to his heart. – Nelson Mandela
2. Language is the road map of a culture. If tells you where its people come from and where they are going. – Rita Mae Brown

VII. **விரிவான விடையளிக்கவும்.** 1x7=7

29. அ. தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக் குறிப்புகளை எழுதுக.

(அல்லது)

ஆ. புயலிலே தோணி படும் பாட்டை புயலிலே ஒரு தோணி கதை வாயிலாக விவரிக்க.

(அல்லது)

இ. குறிப்புகளைப் பயன்படுத்திக் கட்டுரை வரைக.

முன்னுரை – விண்வெளியில் தமிழரின் அறிவு – கல்பனா சாவ்லா – விண்ணியல் அறிவு – சாதனைகள் – முடிவுரை.

எங்கள் பதிப்பகத்தின் கையேடுகள் :9th & 10th தமிழ் & 10th, 11th, 12th ஆங்கிலம் தொடர்புக்கு : 89036 85635

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com